**இயல் ஏழு**

*நாகரிகம், நாடு, சமூகம்*

# விதை நெல்



மேற்கத்தியர் மேற்கொண்ட கடல்வழிக் குதிரை வணிகம், 17ஆம் நூற்றாண்டுச் சுவரோவியம், திருப்புடைமருதூர்.

## கற்றல் நோக்கங்கள்

- *தன்வரலாறு என்னும் இலக்கிய வகைமையின் கருத்து வெளிப்பாட்டுத் தன்மையினைப் புரிந்து, அதுபோல எழுத முற்படுதல்.*
- *நாட்டின் பன்முக வளர்ச்சிக்கு வித்திட்ட பெண்களின் பங்களிப்பினைக் கலைநிகழ்ச்சி விவரிப்பாக வெளிப்படுத்தும் ஆற்றல் பெறுதல்.*
- *காப்பியம், மெய்க்கீர்த்தி ஆகிய இலக்கியங்களை அவற்றின் தனித்தன்மைகளுடன் படித்துச் சுவைத்தல்.*
- *பொருளிலக்கணத்தில் புறப்பொருள் பெறும் இடமறிந்து, அதனைச் செய்யுளில் கண்டறியும் திறன்பெறுதல்.*



10th_Tamil_Unit 7.indd 159 12/08/2021 7:01:01 PM

உரைநடை உலகம்

நாடு


௭

# சிற்றகல் ஒளி

– ம.பொ.சிவஞானம்

**நுழையும்முன்**

கதை கேட்கும் வழக்கம் சிறிய வயது முதல் அனைவருக்கும் இருக்கிறது. கேட்பது குறைந்துபோய்க் கதை படிப்பது அதன் அடுத்த படிநிலை. அதுவே ஒருவரைப் படிப்பாளியாகவும் படைப்பாளியாகவும் பக்குவப்படுத்துகிறது. அப்படியான ஒரு படைப்பாளி தன்னை முன்வைத்துத் தன் நாட்டின் வரலாற்றைக் கூறும்நிலை சிலருக்கு மட்டுமே வாய்த்திருக்கிறது. வரலாற்றின் போக்கினை மாற்றி வடிவமைத்தவர்களின் வாழ்க்கைக் கதையைத் தன் வரலாறாகப் படிப்பது, நம்மையும் அந்த வரலாற்றுப் பாத்திரமாக உணரவைக்கும்!



இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் 1906ஆம் ஆண்டு, மிகவும் சிறப்புடைய ஆண்டாகக் கருதப்படுகிறது. அந்த ஆண்டில்தான் காந்தியடிகள் சத்தியாக்கிரகம் என்ற அறப்போர் முறையைத் தென்னாப்பிரிக்காவில் தொடங்கி வைத்தார். தமிழ்நாட்டைத் தனித்து நோக்கினாலும் வரலாற்றுச் சிறப்பிற்குரிய நிகழ்வுகள் பல **அவ்வாண்டில்** நடைபெற்றன. வ.உ.சிதம்பரனார் ஆங்கிலேயர்களுக்கு எதிராகச் சுதேசிக் கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார். இத்தகைய சிறப்புள்ள ஆண்டில் ஜூன் 26ஆம் நாள், சென்னை ஆயிரம்விளக்கு வட்டம் சால்வன்குப்பம் என்னும் பகுதியில் நான் பிறந்தேன். நான் பிறந்த வட்டத்துக்கு ஆயிரம்விளக்கு எனப் பெயர் இருப்பினும் என்னைப் பெற்றெடுத்த குடும்பம் வறுமை என்னும் இருள் சூழ்ந்ததுதான். என் தந்தையார் பெயர் பொன்னுசாமி. அன்னையின் பெயர் சிவகாமி. பெற்றோர் எனக்கு இட்ட பெயர் ஞானப்பிரகாசம். ஆனால் சரபையர் என்ற முதியவர் ஒருவர் என்னுடைய பெயரை மாற்றி 'சிவஞானி' என்றே அழைத்தார். பின்னாளில் அவர் எனக்கிட்டு அழைத்த சிவஞானி என்னும் பெயரே சிறிது திருத்தத்துடன் சிவஞானம் என்று நிலைபெற்றது.

## வறுமையால் இழந்த கல்வி

நான் பள்ளியில், மூன்றாம் வகுப்பில் நுழைந்த ஏழாம் நாளில், பகல் நேரத்தில் வீட்டுக்கு வந்து சாப்பிட்டுவிட்டுத் திரும்பவும் பள்ளிக்குப் போனேன். காலையிலேயே பாடப்புத்தகங்களோடு வராததற்காக ஆசிரியர் என்னைக் கண்டித்தார். பிற்பகலில் புத்தகங்களைக் கட்டாயம் கொண்டுவர வேண்டுமென்று கட்டளையிட்டிருந்தார். கையில் புத்தகமின்றி இருந்த என்னைக் கண்ட ஆசிரியர் பள்ளியிலிருந்து விரட்டிவிட்டார். இது எனக்குப் பெருத்த அவமானமாக இருந்ததால் அழுதவண்ணம் வீட்டுக்கு வந்தேன்.

நான் அழுவதற்கான காரணத்தை அறிந்ததும், என் தந்தை என்னைக் கையோடு அழைத்துக்கொண்டு வகுப்பறைக்குள் நுழைந்தார். என்னை நல்ல வெயில் நேரத்தில் வீட்டிற்கு விரட்டியதற்காக, ஆசிரியரை என் தந்தையார் வாயார வைதார். அன்றோடு என்

கல்வி முற்றுப் பெற்றது. மூன்றாம் வகுப்பிற்கு அந்த நாளில் தேவைப்பட்டவை ஆங்கிலம் – தமிழ் மொழிப் பாடப்புத்தகங்கள்தாம். இவற்றைக்கூட வாங்கிக்கொடுக்க என் குடும்பத்தின் வறுமை இடம் தரவில்லை.

### செவிச்செல்வம் பெற்றேன்

அன்னையார் இளமையிலே எனக்குப் பயிற்றுவித்த பாக்கள் எனது இலக்கியப் பயிற்சிக்கான பாலபாடங்களாக அமைந்தன. அல்லி அரசாணி மாலை, பவளக்கொடி மாலை ஆகிய அம்மானைப் பாடல்களைப் பாடுவார். அந்த நேரத்தில் என்னையும் சிறிது நேரம் அந்த நூல்களைப் படிக்க வைப்பார். அதனால், சந்த நயத்தோடும் எதுகை மோனையோடும் உள்ள அம்மானைப் பாடல்களை அடிக்கடி பாடிப்பாடிப் பிள்ளைப் பருவத்திலேயே இலக்கிய அறிவை வளர்த்து வந்தேன். சித்தர் பாடல்களை நானாகவே விரும்பிப் படித்து மனனம் செய்வேன்.

சொற்பொழிவுகளைக் கேட்பதன் மூலமாகவும் நான் இலக்கிய அறிவு பெற்றேன். அப்போது அவர்கள் வெளியிடும் சிறந்த கருத்துகளை ஏடுகளில் குறித்து வைத்துக் கொள்வேன். ஒருவன் அறிவு விளக்கம் பெறுவதற்கு இரண்டு வழிகள் உள. ஒன்று கல்வி; மற்றொன்று கேள்வி. யான் முறையாக ஏட்டுக்கல்வி பெற இயலாமல் போனதால் ஏற்பட்ட இழப்பை ஈடு செய்யக் கேள்வி ஞானத்தைப் பெறுவதிலே மிகுந்த ஆர்வம் காட்டினேன். எனது கேள்வி ஞானத்தைப் பெருக்கிய பெருமையிலே திருப்பாதிரிப்புலியூர் ஞானியாரடிகளுக்கே மிகுந்த பங்குண்டு.

### புத்தகப்பித்தன்

எனக்கு உலகியல் அறிவு தோன்றிய நாள்தொட்டு இயன்றவரை தாய்மொழியிலேனும் நல்ல புலமை பெற்றிட வேண்டும் என்று விரும்பி, அதற்காக இடைவிடாது முயன்று வந்திருக்கிறேன். சுருங்கச்சொன்னால், என் அறியாமையுடன் கடும்போர் நடத்தியிருக்கிறேன்.

நூல் வாங்குவதற்குப் போதிய பணமில்லாத குறையால் பழைய புத்தகங்கள் விற்கும் கடைகளுக்குச் சென்று, எனக்கு விருப்பமான புத்தகங்களை, மிக மிகக் குறைந்த விலைக்கு வாங்குவதை வழக்கமாகக் கொண்டிருந்தேன். உணவுக்காக வைத்திருக்கும் பணத்தில் புத்தகங்களை வாங்கிவிட்டு, பல வேளைகளில் பட்டினி கிடந்திருக்கிறேன். குறைந்த விலைக்கு நல்ல நூலொன்று கிடைத்துவிட்டால் பேரானந்தம் அடைவேன். என் வாழ்நாளில் நானாக முயன்று சேர்த்துவைத்துள்ள சொத்துகள் என்னிடமுள்ள பல்லாயிரக்கணக்கான நூல்களைத் தவிர வேறில்லை என்று உறுதியாகக் கூறுவேன்.

### பேராயக் கட்சி (காங்கிரஸ் கட்சி)

1931இல் காந்தி – இர்வின் ஒப்பந்தக் காலத்திலே நாடு முழுவதிலுமிருந்த பேராயக் கட்சிக்காரர்கள் ஆக்கவழிப்பட்ட வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டனர். அந்நியத் துணிக்கடை மறியல், காந்தி – இர்வின் ஒப்பந்தப்படி அனுமதிக்கப்படவில்லை. ஆகவே தீண்டாமை விலக்கு, கதர் விற்பனை ஆகியவற்றிலே பேராயக் கட்சிக்காரர்களை ஈடுபடுத்தியது கட்சித்தலைமை. பேராயக் கட்சியால் நடத்தப்பட்ட ஊர்வலங்களிலும் கதர் விற்பனையிலும் தவறாமல் கலந்துகொள்வேன்.

### ஆறுமாதக் கடுங்காவல்

30.09.1932இல் 'தமிழா! துள்ளி எழு' என்னும் தலைப்புடைய துண்டறிக்கை ஒன்றைக் கடற்கரையில் குழுமியிருந்த மக்களிடையே வழங்கியதற்காக, நான் சிறையிலிடப்பட்டேன். பழங்காலத்திலே பாண்டியன் ஆண்ட பெருமையைக் கூறி, சோழன் ஆண்ட சிறப்பைச் சொல்லி, சேரன் ஆண்ட மாண்பினைக் காட்டி, நம் அருமைத் தமிழ்நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த சிறுமையையும் நினைவூட்டி விடுதலைப் போரில் ஈடுபட வருமாறு தமிழர்க்கு அழைப்பு விடுத்திருந்தேன். அவற்றை நானும் வேறு சில தோழர்களும் சேர்ந்து நூற்றுக்கணக்கான பிரதிகளைக் கையாலேயே எழுதினோம். எதிர்பார்த்தபடியே காவலர்கள் கைது செய்தனர். வழக்குத் தொடரப்பட்டு மூன்று மாதக் கடுங்காவல் தண்டனையும் 300 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது. கட்டத் தவறினால் மேலும் மூன்று மாதக் கடுங்காவல். நான் ஆறுமாதமும் கடுங்காவலை அனுபவித்தேன்.

சிறையில் வேளாவேளைக்கு எப்படியோ எனக்குச் சோறு கிடைத்து வந்தது. என்னளவில் தொடர்ந்து ஆறுமாத காலத்திற்கு வாழ்க்கைப் போராட்டத்திலிருந்து விடுதலை பெற்றுவிட்டேன். 'சி' வகுப்புச் சோறுதான் என்றாலும், அடிக்கடி பட்டினியைச் சந்தித்தவனுக்கு அதுவே அமுதந்தானே! ஆனால், என் குடும்பத்தின் அவலநிலை நினைவுக்கு வந்தபோதெல்லாம் சிறையில் தரப்பட்ட உணவை மனநிறைவோடு உண்ண முடியாதவனானேன்.

1942 ஆகஸ்டு 8ஆம் நாள், இந்திய வரலாற்றில் பொன் எழுத்துகளால் பொறிக்கத்தக்க புனித நாளாகும். அன்றுதான் 'இந்தியாவை விட்டு வெள்ளையனே வெளியேறு' என்ற தீர்மானத்தைப் பம்பாயில் கூடிய அகில இந்திய பேராயக்கட்சி ஒரு மனதாக நிறைவேற்றியது. தேசம் முழுவதுமே அன்று புத்துயிர் பெற்றது. நாடெங்கும் தலைவர்கள் கைதான நிலையில் நானும் ஆகஸ்டு 13ஆம் நாள் வேலூர் மத்திய சிறைச்சாலையில் அடைக்கப்பட்டேன். காமராசர், தீரர் சத்தியமூர்த்தி, பிரகாசம் உட்பட, தென்னகத்தின் முன்னணித் தலைவர்கள் பலரை அங்கு நான் கண்டேன். சில நாள்களுக்குப் பின் அங்கிருந்து அமராவதிச் சிறைக்கு மாற்றினர். சிறைச்சாலையில் எங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தின் மேற்கூரை துத்தநாகத் தகடுகளால் வேயப்பட்டிருந்தது. கோடைக்காலத்தில் 120 பாகை அளவில் வெயில் காயக்கூடிய பகுதியில் மின்சார விசிறிகூட இல்லாமல் எங்களுடைய நிலை மிகவும் இரங்கத்தக்கதாக இருந்தது.

## 'தமிழகம்' பற்றிய கனவு

1947, ஆகஸ்டு பதினைந்தாம் நாளன்று சென்னை மாநகரில் விடுதலை விழாக் கொண்டாடி முடிந்ததும் மறுநாள் காலை நாங்கள் ஒரு குழுவாக வடக்கெல்லைக்குச் சென்றோம். இதுவே வடக்கெல்லை மீட்சிக்கான முதல் முயற்சியாக அமைந்தது. ஆசிரியர் மங்கலங்கிழார் என்ற சுமார் 55 வயதுடைய பெரியாரின் அழைப்பின் மீதே நாங்கள் வடக்கெல்லைக்குச் சென்றோம். அவர் சிறந்த தமிழறிஞர். இந்திய விடுதலைக்குப் பிறகு மாநிலங்களை மொழிவாரியாகப் பிரித்தனர். அப்போது, ஆந்திரத் தலைவர்கள் சித்தூர் மாவட்டம் முழுவதையும் புதிதாக அமையவிருக்கும் ஆந்திர மாநிலத்துடன் இணைக்க விரும்பினர். அச்சூழலில் வடக்கெல்லைத் தமிழ்மக்களை ஒருங்கிணைத்துத் தமிழுணர்வு கொள்ளச் செய்தவர் தமிழாசான் மங்கலங்கிழார். அவருடன் இணைந்து, தமிழரசுக் கழகம் சென்னையிலும் திருத்தணியிலும் தமிழர் மாநாடு நடத்தியது. சித்தூர், புத்தூர், திருத்தணி ஆகிய இடங்களிலும் வடக்கெல்லைப் போராட்டத்தைத் தொடங்கியது. போராட்டத்தில் ஈடுபட்ட நான், மங்கலங்கிழார், விநாயகம், ஈ.எஸ். தியாகராஜன், ரஷீத் என ஏராளமானோர் சிறைப்பட்டோம். போராட்டத்தில் ஈடுபட்டு இராஜமுந்திரி சிறையிலிருந்த திருவாலங்காடு கோவிந்தராசன், பழநி சிறையிலிருந்த மாணிக்கம் ஆகிய இருவரும் சிறையிலேயே உயிர் துறந்தனர்.

சர்தார் கே.எம். பணிக்கர் தலைமையில் மத்திய அரசால் அமைக்கப்பட்ட மொழிவாரி ஆணையம், சித்தூர் மாவட்டம் முழுவதையும் ஆந்திராவிற்குக் கொடுத்துவிட்டது. அதனை எங்களால் ஏற்க முடியவில்லை. 'மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்' என்று முழங்கினோம். மீண்டும் பெரும்

### தெரிந்து தெளிவோம்

நான் சிலப்பதிகாரக் காப்பியத்தை மக்களிடம் கொண்டுசெல்ல விரும்பியதற்குக் காரணமுண்டு; திருக்குறளையோ, கம்பராமாயணத்தையோ விரும்பாதவனல்லன்; ஆயினும் இந்திய தேசிய ஒருமைப்பாட்டிற்குக் கேடில்லாத வகையில், தமிழினத்தை ஒன்றுபடுத்த எடுத்துக்கொண்ட முயற்சிக்குப் பயன்படக்கூடிய ஓர் இலக்கியம் தமிழில் உண்டென்றால், அது சிலப்பதிகாரத்தைத் தவிர வேறில்லையென்று உறுதியாகக் கூறுவேன். இளங்கோ தந்த சிலம்பு, தமிழினத்தின் பொதுச்சொத்து. எனவேதான் தமிழகத்தின் பட்டிதொட்டியெங்கும் சிலப்பதிகார மாநாடுகள் நடத்தினோம்.

சிலம்புச் செல்வர் ம.பொ.சி

போராட்டம் தொடங்கியது. அதன் விளைவாக படாஸ்கர் ஆணையம் அமைக்கப்பட்டு, திருத்தணிவரையுள்ள தமிழ்நிலங்கள் மீட்கப்பட்டன.

## சென்னையை மீட்டோம்

ஆந்திர மாநிலம் பிரியும்போது சென்னைதான் அதன் தலைநகராக இருக்க வேண்டும் என்று ஆந்திரத் தலைவர்கள் கருதினர். அந்நாள் முதல்வர் இராஜாஜிக்கு நிலைமையின் தீவிரத்தை உணர்த்தியபோது, தலைநகர் காக்கத் தன் முதலமைச்சர் பதவியைத் துறக்கவும் அவர் முன்வந்தார். சென்னை மாகாணத்திலிருந்து பிரித்து ஆந்திரம் அமைவதற்காக ஏற்படுத்தப்பட்டிருந்த நீதிபதி வாஞ்சு தலைமையிலான ஒரு நபர் ஆணையம், ஆந்திரத்தின் தலைநகராகச் சென்னை இருக்க வேண்டும் என்ற இடைக்கால ஏற்பாட்டினைப் பரிந்துரைத்திருப்பதாக அதிகாரப்பூர்வமற்ற கருத்துகள் நிலவின.

இதையொட்டி, மாநகராட்சியின் சிறப்புக் கூட்டமொன்றை அப்போதைய மாநகரத் தந்தை செங்கல்வராயன் தலைமையில் கூட்டி, சென்னை பற்றிய தீர்மானமொன்றை முன்மொழிந்து, "தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" என்று முழங்கினேன். தீர்மானம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டமை, நடுவணரசை அசைத்தது. கடைசியாக, 25.03.1953 அன்று நாடாளுமன்றத்தில் பிரதமர் நேரு நடுவணரசின் சார்பில் அதிகாரப்பூர்வமான உறுதிமொழியொன்றை வெளியிட்டார். அதன்படி ஆந்திர அரசின் தலைநகரம் ஆந்திர நாட்டின் எல்லைக்குள்ளேயே அமையும் என்று உறுதியளிக்கப்பட்டது. சென்னை தமிழருக்கே என்பதும் உறுதியானது.

## தெற்கெல்லைப் போராட்டம்

தாய்த்தமிழக மக்களில் பலர் தெற்கெல்லைக் கிளர்ச்சியோடு எனக்குள்ள தொடர்பை அறியமாட்டார்கள். நான் முதன்முதலில் ஈடுபட்டது தெற்கெல்லைக் கிளர்ச்சியில்தான். 1946 அக்டோபர் 25இல் நாகர்கோயில் நகரின் ஒரு பகுதியான வடிவீசுவரத்தில் வடிவை வாலிபர் சங்கத்தின் ஆண்டு விழாவில் பேசினேன். அதுதான் தெற்கெல்லைக் கிளர்ச்சி பற்றிய எனது முதல் பேச்சு. அந்நாளில் திருவிதாங்கூர் சமஸ்தானம் தனி அரசாக இருந்தது.

1953–54ஆம் ஆண்டுகளில் தெற்கெல்லைப் பகுதிகளைக் கேரள (திருவிதாங்கூர்) முடியாட்சியிலிருந்து மீட்கவும் போராடினோம். தமிழக வடக்கு – தெற்கு எல்லைக் கிளர்ச்சிகளைத் தமிழகம் தழுவிய அளவில் தொடங்கிவைத்தது தமிழரசுக் கழகம்தான் என்றாலும் அதனை நடத்துகின்ற பொறுப்பை எல்லைப்பகுதி மக்களிடமே விட்டுவைத்திருந்தேன். அவர்களுள் பி.எஸ். மணி, ம. சங்கரலிங்கம், நாஞ்சில் மணிவர்மன், பி.ஜே. பொன்னையா ஆகியோர் முதன்மையானவர்கள். தெற்கெல்லைக் கிளர்ச்சியில் திருவிதாங்கூர் ஆட்சி நடத்திய துப்பாக்கிச் சூடு காரணமாக உயிர்நீத்த தமிழரசுக் கழகத் தோழர்களான தேவசகாயம், செல்லையா ஆகிய இருவரையும் நாம் மறந்துவிடக் கூடாது. நதானியல், தாணுலிங்கம், காந்திராமன் போன்ற முதியவர்களும் என்பால் நம்பிக்கை வைத்திருந்தனர். இயற்கையாகவே போர்க்குணம்கொண்ட நேசமணி, தென் திருவிதாங்கூரில் மிகுந்த செல்வாக்குடையவர். அவருடைய வருகைக்குப் பிறகு போராட்டம் மேலும் வலுப்பெற்றது.

### மார்ஷல் ஏ. நேசமணி

இளம்வயதிலேயே சமூக விடுதலைக்காகப் போராடியவர்; வழக்கறிஞர். நாகர்கோவில் நகர்மன்றத் தலைவராகவும் சட்டமன்ற உறுப்பினராகவும் நாடாளுமன்ற உறுப்பினராகவும் பணியாற்றினார். குமரி மாவட்டப் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றவர்; இதனால் மார்ஷல் நேசமணி என்று அழைக்கப்பட்டார். 1956 நவம்பர் 1ஆம் நாள் கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டுடன் இணைந்து, தமிழகத்தின் தென் எல்லையாக மாறியது. இவருடைய நினைவைப் போற்றும் வகையில் தமிழக அரசு இவருக்கு நாகர்கோவிலில் சிலையோடு மணிமண்டபமும் அமைத்துள்ளது.



10th_Tamil_Unit 7.indd 163 12/08/2021 7:01:03 PM

திருவிதாங்கூர் ஆட்சி அகன்று, கேரள மாநிலம் உருவானது. அப்போது தமிழர்கள் மிகுதியாக வாழக்கூடிய தேவிகுளம், பீர்மேடு, தோவாளை, அகத்தீசுவரம், கல்குளம், விளவங்கோடு, நாகர்கோவில் ஆகிய பகுதிகள் தமிழகத்தோடு சேர வேண்டும் என்று தமிழரசுக் கழகம் போராட்டத்தைத் தொடங்கியது. ஆனால் மேற்சொன்ன பகுதிகளோடு தமிழகத்திலிருந்த கோவை மாவட்டத்தின் மேற்குப்பகுதி, நீலகிரி மாவட்டத்திலுள்ள கூடலூர், உதகமண்டலம் ஆகியவற்றையும் பிரித்தெடுத்துக் கேரளத்துடன் இணைக்க வேண்டுமென்று கேரளத்தவர், பசல் அலி ஆணையத்திடம் விண்ணப்பித்தனர். பசல் அலி ஆணையம் நடுவண் அரசுக்குத் தந்த பரிந்துரை 1955 அக்டோபர் 10ஆம் நாள் வெளியானது. அந்தப் பரிந்துரையில், மாநிலங்களை மொழிவாரியாகப் பிரித்து அமைக்கும் கொள்கை ஒப்புக்கொள்ளப்பட்டதோடு சென்னை மாநிலத்தில் உள்ள மலபார் மாவட்டத்தைக் கேரளத்தோடும் திருவிதாங்கூர் – கொச்சி இராஜ்யத்திலிருந்த கல்குளம், விளவங்கோடு, தோவாளை, அகத்தீசுவரம், செங்கோட்டை ஆகிய பகுதிகள் தமிழ்நாட்டோடும் இணைய வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தது. தேவிகுளம், பீர்மேடு நம் கைவிட்டுப் போயின.

புறநானூற்றிலும் சிலப்பதிகாரத்திலும் தமிழகத்தின் வடக்கெல்லை வேங்கட மலையாகவும் தெற்கெல்லை குமரிமுனையாகவும் கூறப்படுவதனைப் படித்தபோது எனது நெஞ்சம் இறும்பூது எய்தியது. மலையும் கடலும் ஒரு நாட்டின் இயற்கை எல்லைகளாக அமைவதென்பது அந்த நாட்டின் தவப்பயனாகும். அந்தத் தெய்வீக எல்லைகளை ஓரளவேனும் தமிழகம் திரும்பப் பெற்றது என்பதே என் வாழ்நாள் மகிழ்ச்சியாகும்.

### எத்திசையும் புகழ் மணக்க.....

**கடல்கடந்த தமிழ் வணிகம்**

ஆஸ்டிரியா நாட்டுத் தலைநகரமான வியன்னாவில் அமைந்துள்ள அருங்காட்சியகத்தில் பேபிரஸ் தாளில் எழுதப்பட்ட அரிய கையெழுத்துச் சுவடி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. இச்சுவடி சேர நாட்டுத் துறைமுகமான முசிறியில் வாழ்ந்த தமிழ் வணிகருக்கும் எகிப்து நாட்டின் அலெக்ஸாண்டிரியா துறைமுகத்தில் வாழ்ந்த கிரேக்க வணிகருக்கும் இடையிலான வணிக ஒப்பந்தம். இது கி.பி. 2ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டது.

### நூல் வெளி

ம.பொ.சிவஞானத்தின் 'எனது போராட்டம்' என்னும் தன்வரலாற்று நூலில் இருந்து இக்கட்டுரை தொகுத்து வழங்கப்பட்டுள்ளது. சிலம்புச்செல்வர் என்று போற்றப்படும் ம.பொ.சிவஞானம் (1906 – 1995) விடுதலைப் போராட்ட வீரர்; 1952முதல் 1954வரை சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் 1972முதல் 1978வரை சட்டமன்ற மேலவைத் தலைவராகவும் பதவி வகித்துள்ளார்; தமிழரசுக் கழகத்தைத் தொடங்கியவர். 'வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு' என்னும் இவருடைய நூலுக்காக 1966ஆம் ஆண்டு சாகித்திய அகாதெமி விருது பெற்றார். தமிழக அரசு திருத்தணியிலும் சென்னை தியாகராய நகரிலும் இவருக்குச் சிலை அமைத்துள்ளது.

## கற்பவை கற்றபின்...

1. எவரேனும் ஓர் அறிஞர் வாழ்வில் நடந்த நிகழ்வுகளில் உங்களைக் கவர்ந்த ஒன்றை அவரே சொல்வதைப் போன்று தன் வரலாறாக மாற்றி எழுதுக.
2. நீங்கள் படித்துச் சுவைத்த வரலாற்றுக் கதைகள் பற்றி வகுப்பறையில் உரை நிகழ்த்துக.



10th_Tamil_Unit 7.indd 164 12/08/2021 7:01:03 PM

கவிதைப் பேழை

# நாடு

## எ

# ஏர் புதிதா?

*–கு.ப.ராஜகோபாலன்*

YU5BS

### நுழையும்முன்

சங்கத் தமிழரின் திணைவாழ்வு, வேளாண்மையை அடிப்படையாகக் கொண்டது. உழுவோர் உலகத்தார்க்கு அச்சாணி எனப் போற்றப்பட்டனர். உழவே தலையான தொழில் என்றாயிற்று. உழவு, தொழிலாக இல்லாமல் பண்பாடாகவும் திகழ்ந்தது. இன்று உழுவோர் அச்சாணி என்ற கருத்தைப் புதுப்பிக்க வேண்டிய சூழல் எழுந்துள்ளது. உழவுண்டெனில் உயர்வுண்டு என்ற குரல் இன்றும் தொடர்கிறது. தமிழ் மரபின் 'பொன் ஏர் பூட்டுதல்' என்ற பண்பாட்டு நிகழ்வு பல்கிப் பெருக முன்னத்தி ஏராக நாம் முன்னிற்க வேண்டும்.

*முதல்மழை விழுந்ததும்*
*மேல்மண் பதமாகிவிட்டது.*
*வெள்ளி முளைத்திடுது, விரைந்துபோ நண்பா!*
*காளைகளை ஓட்டிக் கடுகிச்செல், முன்பு!*

*பொன் ஏர் தொழுது, புலன் வழிபட்டு*
*மாட்டைப் பூட்டி*
*காட்டைக் கீறுவோம்.*
*ஏர் புதிதன்று, ஏறும் நுகத்தடி கண்டது,*

*காடு புதிதன்று, கரையும் பிடித்ததுதான்*
*கை புதிதா, கார் புதிதா? இல்லை.*
*நாள்தான் புதிது, நட்சத்திரம் புதிது!*
*ஊக்கம் புதிது, உரம் புதிது!*

*மாட்டைத் தூண்டி, கொழுவை அமுத்து*
*மண்புரளும், மழை பொழியும்,*
*நிலம் சிலிர்க்கும், பிறகு நாற்று நிமிரும்.*
*எல்லைத் தெய்வம் எல்லாம் காக்கும்;*

*கவலையில்லை!*
*கிழக்கு வெளுக்குது*
*பொழுதேறப் பொன்பரவும் ஏரடியில்*
*நல்லவேளையில் நாட்டுவோம் கொழுவை.*

வேளாண்மை செழிக்கவும் மானுடம் தழைக்கவும் சித்திரைத் திங்களில் நடத்தப்படும் பொன்ஏர் பூட்டுதல் தமிழர் பண்பாட்டின் மகுடம் ஆகும்.



### நூல் வெளி



'ஏர் புதிதா?' எனும் கவிதை கு.ப.ரா. படைப்புகள் என்னும் நூலில் இடம்பெற்றுள்ளது. 1902இல் கும்பகோணத்தில் பிறந்த கு.ப.ராஜகோபாலன் மிகச்சிறந்த சிறுகதை ஆசிரியர், கவிஞர், நாடக ஆசிரியர், மறுமலர்ச்சி எழுத்தாளர் எனப் பன்முகம் கொண்டவர். தமிழ்நாடு, பாரதமணி, பாரததேவி, கிராம ஊழியன் ஆகிய இதழ்களில் ஆசிரியராகப் பணிபுரிந்தார். இவரின் மறைவுக்குப் பின்னர் இவரது படைப்புகள் நூல்களாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

## கற்பவை கற்றபின்...

முதல் மழை விழுந்தது – தொடர்ந்து நிகழும் உழவுச் செயல்களை ஏர்புதிதா? கவிதை கொண்டு வரிசைப்படுத்திப் பேசுக.

கவிதைப் பேழை

# நாடு ஏ

# மெய்க்கீர்த்தி

3DMOQ

**நுழையும்முன்**

*அரசர்கள் தங்கள் வரலாறும் பெருமையும் காலம் கடந்தும் நிலைக்க விரும்பினார்கள்; அழியாத வகையில் அதனைக் கல்லில் செதுக்கினார்கள். சங்க இலக்கியமான பதிற்றுப்பத்துப் பாடல்களின் இறுதியிலுள்ள பதிகங்கள் இதற்கு முன்னோடி! பல்லவர் கல்வெட்டுகளிலும் பாண்டியர் செப்பேடுகளிலும் முளைவிட்ட இவ்வழக்கம், சோழர் காலத்தில் மெய்க்கீர்த்தி எனப் பெயர் பெற்றது; செப்பமான வடிவம் பெற்றது; கல்இலக்கியமாய் அமைந்தது.*

*இந்தி ரன்முதற் திசாபாலர் எண் மரும்ஒரு வடிவாகி*
*வந்தபடி யென நின்று மனுவாணை தனி நடாத்திய*
*படியானையே பிணிப்புண்பன*
*வடிமணிச்சிலம்பே யரற்றுவன*
*செல்லோடையே கலக்குண்பன*
*வருபுனலே சிறைப்படுவன*
*மாவே வடுப்படுவன*
*மாமலரே கடியவாயின*
*காவுகளே கொடியவாயின*
*கள்ளுண்பன வண்டுகளே*
*பொய்யுடையன வரைவேயே*
*போர்மலைவன எழுகழனியே*
*மையுடையன நெடுவரையே*
*மருளுடையன இளமான்களே*
*கயற்குலமே பிறழ்ந்தொழுகும்*
*கைத்தாயரே கடிந்தொறுப்பார்*
*இயற்புலவரே பொருள்வைப்பார்*
*இசைப் பாணரே கூடஞ்செய்வார்*
*என்று கூறி இவன்காக்கும் திருநாட்டி னியல்இதுவென*
*நின்றுகாவல் நெறிபூண்டு நெறியல்லது நினையாது*
*தந்தையில்லோர் தந்தையாகியுந் தாயரில்லோர் தாயராகியும்*
*மைந்தரில்லொரு மைந்தராகியும் மன்னுயிர்கட்குயிராகியும்*
*விழிபெற்ற பயனென்னவும் மெய்பெற்ற அருளென்னவும்*
*மொழிபெற்ற பொருளென்னவும் முகம்பெற்ற பனுவலென்னவும்*
*எத்துறைக்கும் இறைவனென்னவும் யாஞ்செய்....*



இராசராசன் காலத் தமிழ் கல்வெட்டு, 11 ஆம் நூற்றாண்டு, பெரிய கோயில், தஞ்சாவூர்.

### பாடலின் பொருள்

இந்திரன் முதலாகத் திசைபாலகர் எட்டுப்பேரும் ஒருருவம் பெற்றதுபோல் ஆட்சி செலுத்தினான் சோழன். அவன் நாட்டில் யானைகள் மட்டுமே பிணிக்கப்படுவன (மக்கள் பிணிக்கப்படுவதில்லை). சிலம்புகள் மட்டுமே புலம்புகின்றன (மக்கள் புலம்புவதில்லை). ஓடைகள் மட்டுமே கலக்கமடைகின்றன (மக்கள் கலக்கமடைவதில்லை). புனல் மட்டுமே அடைக்கப்படுகின்றது (மக்கள் அடைக்கப்படுவதில்லை).

மாங்காய்கள் மட்டுமே வடுப்படுகின்றன (மக்கள் வடுப்படுவதில்லை). மலர்கள் மட்டுமே பறிக்கப்படுகின்றன (மக்கள் உரிமைகள் பறிக்கப்படுவதில்லை). காடுகள் மட்டுமே கொடியவனாய் – (கொடி உடையனவாக) உள்ளன (மக்கள் கொடியவராய் இல்லை). வண்டுகள் மட்டுமே கள் – (தேன்) உண்ணுகின்றன (மக்கள் கள் உண்பதில்லை). மலை மூங்கில் மட்டுமே உள்ளீடு இன்றி வெறுமையாய் இருக்கின்றது(மக்களிடையே வெறுமை இல்லை). வயலில் நெற்கதிர்கள் மட்டுமே போராக எழுகின்றன (வேறு போர் இல்லை).

நீண்ட மலைகளே இருள் சூழ்ந்தவையாயிருக்கின்றன (நாட்டில் வறுமை இருள் இல்லை). இளமான்களின் கண்களே மருள்கின்றன (மக்கள் கண்களில் மருட்சியில்லை). குளத்து மீன்களே பிறழ்ந்து செல்கின்றன (மக்கள் நிலை பிறழ்வதில்லை). செவிலித்தாயரே சினங் காட்டுவர் (வேறு யாரும் சினம் கொள்வதில்லை). புலவர் பாட்டில் மட்டுமே பொருள் (பொதிந்து) இருக்கின்றது (யாரும் பொருளை மறைப்பதில்லை). இசைப்பாணரே தெருவில் கூடி ஆடிப்பாடுவர் (தேவையற்று வேறு யாரும் அவ்வாறு செய்வதில்லை). இராசராசன் காக்கும் திரு நாட்டின் இயல்பு இது.

அவன் நெறியோடு நின்று காவல் காக்கின்றான். தந்தையில்லாதோருக்குத் தந்தையாய் இருக்கின்றான். தாயில்லாதோருக்குத் தாயாய் இருக்கின்றான். மகனில்லாதோருக்கு மகனாக இருக்கின்றான். உலகில் உயிர்களுக்கு எல்லாம் உயிராக இருக்கின்றான். விழிபெற்ற பயனாகவும் மெய் பெற்ற அருளாகவும் மொழி பெற்ற பொருளாகவும் புகழ் பெற்ற நூல் போலவும் அவன் திகழ்கிறான்; புகழ் அனைத்திற்கும் தலைவனாகி யாதும் புரிகின்றான்.

**நூல் வெளி**

கோப்பரகேசரி, திருபுவனச் சக்கரவர்த்தி என்று பட்டங்கள் கொண்ட இரண்டாம் இராசராச சோழனது மெய்க்கீர்த்தியின் ஒரு பகுதி பாடமாக உள்ளது. இம்மெய்க்கீர்த்திப் பகுதியின் இலக்கிய நயம் நாட்டின் வளத்தையும் ஆட்சிச் சிறப்பையும் ஒருசேர உணர்த்துவதாக உள்ளது. இவருடைய மெய்க்கீர்த்திகள் இரண்டு. அதில் ஒன்று 91 அடிகளைக் கொண்டது. அதில் 16–33 வரையான அடிகள் பாடப்பகுதியாகத் தரப்பட்டுள்ளன. இப்பாடப் பகுதிக்கான மூலம் தமிழ் இணையக் கல்விக் கழகத்திலிருந்து பெறப்பட்டது.

முதலாம் இராசராசன் காலந்தொட்டு மெய்க்கீர்த்திகள் கல்லில் வடிக்கப்பட்டுள்ளன. மெய்க்கீர்த்திகள் கல்வெட்டின் முதல்பகுதியில் மன்னரைப் பற்றிப் புகழ்ந்து இலக்கிய நயம்பட எழுதப்படும் வரிகள். இவை புலவர்களால் எழுதப்பட்டுக் கல்தச்சர்களால் கல்லில் பொறிக்கப்பட்டவை.

## கற்பவை கற்றபின்...


உங்கள் ஊரில் உள்ள பண்டைய வரலாற்றுச் சின்னங்களின் ஒளிப்படங்களைத் திரட்டிப் படத்தொகுப்பேடு ஒன்றை உருவாக்குக.

கவிதைப் பேழை

# நாடு ௭

# சிலப்பதிகாரம்

*–இளங்கோவடிகள்*



**நுழையும்முன்**

இன்று 'எங்கும் வணிகம் எதிலும் வணிகம்'! பொருள்களை உற்பத்தி செய்வதைவிட சந்தைப்படுத்துவதில்தான் உலக நாடுகளும் தொழில் முனைவோரும் அதிக அக்கறை செலுத்துகிறார்கள். இன்று நேற்றல்ல; பண்டைக் காலந்தொட்டே வாணிகமும் தொழிலும் ஒழுங்கு முறையுடன் சிறந்திருந்ததை இலக்கியங்கள் காட்சிப்படுத்துகின்றன! அவற்றுள் ஒன்றே மருவூர்ப்பாக்கக் காட்சி!

## மருவூர்ப் பாக்கம்

*வண்ணமும் சுண்ணமும் தண்நறுஞ் சாந்தமும்*
*பூவும் புகையும் மேவிய விரையும்*
*பகர்வனர் திரிதரு நகர வீதியும்;*
*பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்*
*கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்;*

**தூசும் துகிரும் ஆரமும் அகிலும்*
*மாசுஅறு முத்தும் மணியும் பொன்னும்*
*அருங்கல வெறுக்கையோடு அளந்துகடை அறியா*
*வளம்தலை மயங்கிய நனந்தலை மறுகும்;*

*பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு*
*கூலம் குவித்த கூல வீதியும்;* *


*காழியர், கூவியர், கள்நொடை ஆட்டியர்,*
*மீன்விலைப் பரதவர், வெள்உப்புப் பகருநர்,*
*பாசவர், வாசவர், பல்நிண விலைஞரோடு*
*ஓசுநர் செறிந்த ஊன்மலி இருக்கையும்;*

*கஞ்ச காரரும் செம்புசெய் குநரும்*
*மரம்கொல் தச்சரும் கருங்கைக் கொல்லரும்*

*கண்ணுள் வினைஞரும் மண்ணீட்டு ஆளரும்*
*பொன்செய் கொல்லரும் நன்கலம் தருநரும்*
*துன்ன காரரும் தோலின் துன்னரும்*
*கிழியினும் கிடையினும் தொழில்பல பெருக்கிப்*
*பழுதுஇல் செய்வினைப் பால்கெழு மாக்களும்;*
*குழலினும் யாழினும் குரல்முதல் ஏழும்*
*வழுவின்றி இசைத்து வழித்திறம் காட்டும்*
*அரும்பெறல் மரபின் பெரும்பாண் இருக்கையும்;*

*சிறுகுறுங் கைவினைப் பிறர்வினை யாளரொடு*
*மறுஇன்றி விளங்கும் மருவூர்ப் பாக்கமும்*

*இந்திரவிழா ஊரெடுத்த காதை ( அடி 13-39)*



### சொல்லும் பொருளும்

சுண்ணம் – நறுமணப்பொடி,
காருகர் – நெய்பவர் (சாலியர்),
தூசு – பட்டு, துகிர் – பவளம்,
வெறுக்கை – செல்வம், நொடை – விலை,
பாசவர் – வெற்றிலை விற்போர்,
ஓசுநர் – எண்ணெய் விற்போர்,
கண்ணுள் வினைஞர் – ஓவியர்,
மண்ணீட்டாளர் – சிற்பி, கிழி – துணி.

### பாடலின் பொருள்

புகார் நகர மருவூர்ப்பாக்கத்தின் வணிக வீதிகளில் வண்ணக்குழம்பு, சுண்ணப்பொடி, குளிர்ந்த மணச்சாந்து, பூ, நறுமணப் புகைப்பொருள்கள், அகில் முதலான மணப்பொருள்கள் விற்பவர்கள் வீதிகளில் வணிகம் செய்து கொண்டிருக்கின்றனர்.

இங்குப் பட்டு, முடி, பருத்திநூல், இவற்றினைக் கொண்டு அழகாகப் பின்னிக் கட்டும் கைத்தொழில் வல்லுநரான நெசவாளர் வாழும் வீதிகள் உள்ளன. இங்குப் பட்டும் பவளமும், சந்தனமும் அகிலும், முத்தும் மணியும் பொன்னும் அளக்க முடியாத அளவிற்குக் குவிந்து கிடக்கும் வளம் நிறைந்த அகன்ற வணிக வீதிகளும் உள்ளன. மேலும் இவ்வீதிகளில் வேறு பலப்பல பண்டங்களின் விற்பனை நடைபெறுகின்றது. எட்டுவகைத் தானியங்களும் குவிந்து கிடக்கும் கூலக்கடைத் தெருக்களும் உள்ளன.

மருவூர்ப்பாக்கத்தின் தெருக்களில், பிட்டு வணிகம் செய்பவரும் அப்பம் சுடுபவரும் கள் விற்கும் வலைச்சியரும் மீன் விற்கும் பரதவரும் உள்ளனர். மேலும் வெண்மையான உப்பு விற்கும் உமணரும் வெற்றிலை விற்பவரும் ஏலம் முதலான ஐந்து நறுமணப் பொருள் விற்பவரும் பல வகையான இறைச்சிகள் விற்பவரும் எண்ணெய் வணிகரும் இங்கு வணிகம் செய்கின்றனர்.

இவற்றுடன் அத்தெருக்களில் பல்வகைப் பொருள்களை விற்கின்ற கடைகளும் உள்ளன. வெண்கலம், செம்புப் பாத்திரங்கள் செய்வோர், மரத்தச்சர், இரும்புக்கொல்லர், ஓவியர், மண் பொம்மைகள் செய்பவர், சிற்பிகள் ஆகியோர் உள்ளனர். பொற்கொல்லர், இரத்தின வேலை செய்பவர், தையற்காரர், தோல்பொருள் தைப்பவர், துணியாலும் கட்டைகளாலும் பொம்மைகள் செய்பவர் ஆகியோர் உள்ளனர்.

இவ்வாறாகப் பழுதின்றிக் கைத்தொழில் பல செய்யும் மக்கள் வாழும் பகுதிகள் இங்கு நிறைந்துள்ளன. குழலிலும் யாழிலும் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்னும் ஏழு இசைகளைக் (ச, ரி, க, ம, ப, த, நி என்னும் ஏழு சுரங்களை) குற்றமில்லாமல் இசைத்துச் சிறந்த திறமையைக் காட்டும் பெரும்பாணர்களின் இருப்பிடங்களும் உள்ளன.

இவர்களுடன் மருவூர்ப்பாக்கத்தின் தெருக்களில் சிறுசிறு கைத்தொழில் செய்வோர், பிறருக்கு ஏவல் செய்வோர் வாழும் இடங்களும் உள்ளன. இவை அனைத்தும் குற்றமின்றிச் சிறப்புடன் அமைந்து விளங்கப் பரந்து கிடந்தன.

### இலக்கணக் குறிப்பு

வண்ணமும் சுண்ணமும் – எண்ணும்மை
பயில்தொழில் – வினைத்தொகை

### பகுபத உறுப்பிலக்கணம்

மயங்கிய – மயங்கு + இ(ன்) + ய் + அ
மயங்கு – பகுதி
இ(ன்) – இறந்தகால இடைநிலை; 'ன்' புணர்ந்து கெட்டது.
ய் – உடம்படுமெய்
அ – பெயரெச்ச விகுதி

**ஐம்பெருங்காப்பிய முறைவைப்பு**

"சிந்தா மணியாம் சிலப்பதிகா ரம்படைத்தான்
கந்தா மணிமே கலைபுனைந்தான் – நந்தா
வளையா பதிதருவான் வாசவனுக் கீந்தான்
திளையாத குண்டலகே சிக்கும்"

–திருத்தணிகையுலா.



### தெரியுமா?

**பெருங்குணத்துக் காதலாள் நடந்த பெருவழி**

காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து கண்ணகியும் கோவலனும் திருவரங்கம் மற்றும் உறையூர் வழியாகக் கொடும்பாளூர் என்னும் இடத்தை அடைந்தனர். தென்னவன் சிறுமலையின் வலப்பக்கம் வழியாகச் சென்றால் மதுரையை அடையலாம்; இடப்பக்க வழியாகச் சென்றால் திருமால்குன்றம் (அழகர் மலை) வழியாக மதுரை செல்லலாம். இவ்விரண்டுக்கும் இடைப்பட்ட வழியில், சோலைகள் மிகுந்த ஊர்களும் காடுகளும் உள்ளன. அவ்வழியாகச் சென்றால் மூன்று வழிகளும் சந்திக்கும் மதுரைப் பெருவழியை அடைந்து, மதுரை செல்லலாம். கோவலனையும் கண்ணகியையும் கவுந்தியடிகள் இடைப்பட்ட வழியிலேயே அழைத்துச் சென்றார்.

மதுரையில் கணவனை இழந்த கண்ணகி, மதுரையிலிருந்து வைகையின் தென்கரை வழியாக நெடுவேள் குன்றம்(சுருளி மலை) சென்று வேங்கைக் கானல் என்னுமிடத்தை அடைந்தாள்.

### உரைப்பாட்டு மடை (உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்)

உரைப்பாட்டு மடை என்பது சிலப்பதிகாரத்தில் வரும் தமிழ்நடை. இது உரைநடைப்பாங்கில் அமைந்திருக்கும் பாட்டு.

வாய்க்காலில் பாயும் நீரை வயலுக்குத் திருப்பிவிடுவது மடை. உரை என்பது பேசும் மொழியின் ஓட்டம். இதனைச் செய்யுளாகிய வயலில் பாய்ச்சுவது உரைப்பாட்டு மடை.



### நூல் வெளி

சிலப்பதிகாரம், புகார்க்காண்டத்தின் இந்திரவிழா ஊரெடுத்த காதையிலிருந்து இப்பாடப்பகுதி எடுத்தாளப்பட்டுள்ளது.

ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று சிலப்பதிகாரம். இது முத்தமிழ்க்காப்பியம், குடிமக்கள் காப்பியம் என்றும் சிறப்பிக்கப்படுகிறது; மூவேந்தர் பற்றிய செய்திகளைக் கூறுகிறது. இது புகார்க்காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம் என மூன்று காண்டங்களையும் முப்பது காதைகளையும் உடையது; கோவலன், கண்ணகி, மாதவி வாழ்க்கையைப் பாடுவது. மணிமேகலைக் காப்பியத்துடன் கதைத்தொடர்பு கொண்டிருப்பதால் இவையிரண்டும் இரட்டைக்காப்பியங்கள் எனவும்அழைக்கப்பெறுகின்றன.

சிலப்பதிகாரத்தின் ஆசிரியர் இளங்கோவடிகள், சேர மரபைச் சேர்ந்தவர். மணிமேகலையின் ஆசிரியர் சீத்தலைச்சாத்தனார் கோவலன் கண்ணகி கதையைக் கூறி, 'அடிகள் நீரே அருளுக' என்றதால் இளங்கோவடிகளும் 'நாட்டுதும் யாம் ஓர் பாட்டுடைச்செய்யுள்' என இக்காப்பியம் படைத்தார் என்பர்.

## கற்பவை கற்றபின்...

1. *சிலப்பதிகாரக் கதைச் சுருக்கத்தை அறிந்து வந்து வகுப்பறையில் கூறுக.*
2. *சிலப்பதிகாரம் காட்டும் மருவூர்ப்பாக்கம் பற்றிய விவரிப்பை இன்றைய கடைத்தெருவுடன் ஒப்பிட்டு உரையாடுக.*

விரிவானம்

நாடு

எ

# மங்கையராய்ப் பிறப்பதற்கே...

நுழையும்முன்

உலகம் பரந்து விரிந்த திடல்; அதில் ஆடுவாரும் உளர்; பாடுவாரும் உளர்: பிறதிறன் காட்டுவாரும் உளர்; இவர்களுள் வென்றாரே மிகுதி; இதனையே ஆளுமை என்கிறோம். அத்தகைய ஆளுமை மிக்க பெண்களுள் சிலர் இதோ...

6QJ78




பூம்பாறை, அரசு உயர்நிலைப்பள்ளி விழாக்கோலம் பூண்டிருந்தது. பெற்றோர் வருகையால் மாணவர்கள் மகிழ்ச்சியில் திளைத்திருந்தனர். சிறப்பு விருந்தினரான மாவட்ட ஆட்சியரின் உரைக்குப்பின், மாணவச் செல்வங்களின் கலை நிகழ்ச்சிகள் அரங்கேறிக் கொண்டிருந்தன. மாணவியர் பாட்டு, நடனம், நாடகம் எனக் கலைவிருந்து படைத்துப் பார்வையாளர்களை வியப்பில் ஆழ்த்திக் கொண்டிருந்தனர். இதன் தொடர்ச்சியாக மாறுவேட நிகழ்வு தொடங்கியது.

**தொகுப்பாளர்** – தமிழரின் பெருமையை உலக அரங்கான ஐ.நா. அவையில் பரப்பும் வகையில் அங்குத் தமிழ்நாட்டின் செவ்வியல் இசையைப் பாடியவர்; 'காற்றினிலே வரும் கீதமாய்' மக்கள் மனத்தில் நீங்கா இடம்பெற்றவர்; இசைப்பேரரசி என்று நேரு பெருமகனாரால் அழைக்கப்பட்ட எம்.எஸ். சுப்புலட்சுமியாகப் பேச வருகிறார் பத்தாம் வகுப்பு மாணவி முகில்நாச்சி.

www.tntextbooks.in

**முகில்நாச்சி (எம்.எஸ்.சுப்புலட்சுமி)** – நான் மதுரை சண்முகவடிவு சுப்புலட்சுமி. நான் இசைச் சூழலில் வளர்ந்தேன். வீணைக் கலைஞரான என் தாயே எனக்கு முதல் குரு. பத்து வயதில் இசைத்தட்டுக்காகப் பாடலைப் பாடிப் பதிவு செய்தேன். இசை மேதைகளின் வழிகாட்டுதல்களில் என்னை வளர்த்துக்கொண்டேன்.



ஐந்தாம் வகுப்பு வரைதான் கல்வி பயிலும் வாய்ப்புக் கிட்டியது. பதினேழு வயதில் சென்னை மியூசிக் அகாதெமியில் மேதைகள் பலர் முன்பு கச்சேரி செய்து பாராட்டைப் பெற்றேன். திரைப்படங்களில் நடிக்கும் வாய்ப்பு என்னைத் தேடிவந்தது. எனக்கு மீரா திரைப்படம் மிகப்பெரிய வெற்றியைத் தந்தது. அது எனது கடைசித் திரைப்படமாகவும் அமைந்தது. இந்தியா முழுவதிலும் உள்ள பலரின் பாராட்டுகளையும் பெற்றேன். காற்றினிலே வரும் கீதம், பிருந்தாவனத்தில் கண்ணன் முதலிய பாடல்களுக்கு மிகப்பெரிய வரவேற்புக் கிடைத்தது. ஜவகர்லால் நேரு, சரோஜினி நாயுடு போன்ற பெரியோர் பாராட்டியதைப் பெருமையாகக் கருதுகிறேன்.

ஒருமுறை காந்தியடிகளைத் தில்லியில் சந்தித்தபோது 'இரகுபதி இராகவ இராஜாராம்' என்ற பாடலைப் பாடினேன். என்னைப் பாராட்டிய அண்ணல், மீரா எழுதிய பாடல் ஒன்றைக் குறிப்பிட்டுப் பாடச் சொன்னார். பின் சிறிது நாள்களில் முனைந்து அந்தப் பாடலைக் கற்றுப் பயிற்சி செய்தேன். சென்னை வானொலி, 1947இல் காந்தியடிகளின் பிறந்த நாளன்று அப்பாடலை ஒலிபரப்பியது. அப்பாடல் 'ஹரி தும் ஹரோ' என்னும் மீரா பஜன்.

1954இல் நான் தாமரையணி விருது பெற்றபோது, என்னைத் தொட்டுத் தடவிப் பாராட்டிய பார்வையிழந்த ஹெலன் கெல்லரை என்னால் மறக்கமுடியாது! 1963இல் இங்கிலாந்திலும் 1966இல் ஐ.நா. அவையிலும் பாடினேன்.

இதே ஆண்டில் என் குரலில் பதிவு செய்யப்பட்ட வெங்கடேச சுப்ரபாதம் திருப்பதியில் ஒலிக்கத்தொடங்கியது.

1974இல் நோபல் பரிசுக்கு இணையான மகசேசே விருது என் இசைக்குக் கிடைத்த மகுடம். இவ்விருது பெறும் முதல் இசைக் கலைஞராகவும் ஆனேன்.

தமிழ், தெலுங்கு, கன்னடம், சமஸ்கிருதம், மலையாளம், இந்தி, மராத்தி, குஜராத்தி ஆகிய இந்திய மொழிகளிலும் ஆங்கிலத்திலும்கூடப் பாடியுள்ளேன். இந்தியா, மிக உயரிய விருதான 'இந்திய மாமணி' விருதளித்து என்னைச் சிறப்பித்தது.

என்னுடைய பல இசைக் கச்சேரிகள் ஏதாவது ஒரு அமைப்பின் நன்கொடைக்காக நடந்தவை என்பது எனக்குப் பெரும் மகிழ்வை அளிக்கிறது. ஒரு பெண் நினைத்தால், முயன்றால், முன்னேறலாம், வெல்லலாம். நீங்களும் முயலுங்கள்; முன்னேறுங்கள்; வெல்லுங்கள்.

**தொகுப்பாளர்** – தாழம்பூ குங்குமமிட்ட மலர்ச்சியான முகம், புன்னகை தவழ… நீலப் பட்டுப்புடவையின் ஒளியில்… வெள்ளிக்கம்பிகள் மின்னுவதுபோல் தலைமுடியில் இடையிடையே வெள்ளைமுடி… கையில் ஒலி வாங்கி… தம்புரா சுருதிகூட்ட ராகமாலிகாவில்,

குறையொன்று மில்லை மறைமூர்த்தி கண்ணா
குறையொன்று மில்லை கோவிந்தா…

என்று இசைத்துவந்து நம்முன் எம்.எஸ்.சுப்பு லட்சுமியாகவே தோன்றிய மாணவிக்கு நன்றி.

நம் நிகழ்வில் அடுத்ததாக, பொதுவெளியில் ஆடுவது தண்டனைக்குரிய குற்றம் எனும் சட்டம் இயற்றப்பட்டிருந்த காலத்தில் நடன வாழ்வைத் தொடங்கியவர்; நாட்டியம் ஆடுவது கீழ்மையானது என்ற எண்ணம் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பரவலாக இருந்து வந்த நிலையை மாற்றியவர்; இவர் இந்திய அரசின் தாமரைச் செவ்வணி விருது பெற்றவர்; அவர் யாரென்ற உங்கள் வினாவுக்கு விடையாக நம் பள்ளியின் பத்தாம் வகுப்பு மாணவி மோகனா, பாலசரசுவதியாக தோன்றுகிறார். (கரவொலி)



10th_Tamil_Unit 7.indd 172 12/08/2021 7:01:10 PM

www.tntextbooks.in

**மோகனா (பாலசரஸ்வதி)** – வணக்கம்.



எனக்கு ஏழு வயதாக இருக்கும்போது காஞ்சிபுரத்தில் பரதநாட்டிய அரங்கேற்றத்திற்காக முதன்முதலில் மேடை ஏறினேன். பதினைந்து வயதில் சென்னையில் உள்ள சங்கீத சமாஜம் என்னும் அரங்கில் நடன நிகழ்ச்சி நடந்தது. எனது நடனத்தைப் பார்த்த பிறகே மரபுசார் நாட்டியத்தைப் பலரும் தீவிரமாக வரவேற்கத் தொடங்கினர்.

சென்னையில் என் நாட்டியக் கச்சேரியைப் பார்த்த பண்டிட் இரவிசங்கர் அவர்கள் மிகவும் பாராட்டினார். அவரது தம்பியின் மூலமாக வட இந்தியாவின் பல இடங்களில் நடனமாடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. கல்கத்தாவிலும் காசியில் நடந்த அனைத்திந்திய இசை மாநாட்டிலும் சென்னையில் நடந்த இந்திய தேசிய காங்கிரஸ் கண்காட்சியிலும் நம் நாட்டுப் பண்ணாகிய "ஜனகணமன" பாடலுக்கு மெய்ப்பாடுகளோடு ஆடினேன். நாட்டுப்பண்ணுக்கு நடனமாடியது அதுவே முதலும் இறுதியுமாகும்.

ஐரோப்பா, அமெரிக்கா முதலிய வெளிநாடுகளிலும் நடன நிகழ்ச்சிகள் நடத்தியுள்ளேன். டோக்கியோவில் உள்ள 'கிழக்கு மேற்குச் சந்திப்பு' நிகழ்வில் இந்தியாவின் சார்பாகக் கலந்துகொண்டு சிறப்பாக நடனம் ஆடினேன். இந்நிகழ்வு பரதநாட்டியத்திற்கு உலகளாவிய புகழைப் பெற்றுத் தந்தது. பரதநாட்டியக் கலையை முறையாக அணுகினால் ஆன்மிகப் பட்டறிவை நடனத்தால் வழங்க முடியும். இதை நானும் உணர்ந்து உலகிற்கும் உணர்த்தியுள்ளேன். நன்றி!

**தொகுப்பாளர்** – தமிழகத்தில் ஒரு காலத்தில் புறக்கணிக்கப்பட்ட கலைக்கு இந்திய அரங்கிலும் உலக அரங்கிலும் மதிப்பையும் ஏற்பையும் பெற்றுத் தந்தவர்; தமிழகத்தின் பெருமைக்குரிய கலைகளில் ஒன்றாகச் செவ்வியல் நடனம் திகழக் காரணமானவர்; அத்தகு பரதநாட்டியக் கலைஞர் பாலசரசுவதியாக வேடமிட்டு வந்த மாணவி மோகனாவிற்கு நன்றி!.

இனி, அடுத்தபடியாக ஓர் எளிய குடும்பத்தில் பிறந்து, பெண் என்ற வகையில் குடும்ப அமைப்பின் நெருக்கடிகளை எதிர்கொண்டு, தம்மை ஓர் இலக்கியவாதியாக அடையாளப்படுத்தியவர்; தமிழில் எழுதிய பெண்களில் முதன்முதலில் களத்திற்குச் சென்று மக்களிடம் செய்திகளைத் திரட்டிக் கதைகள் எழுதியவர்; புதினங்கள், சிறுகதைகள், கட்டுரைகள், குறுநாவல், குழந்தை இலக்கியம், வரலாற்று நூல் என எழுத்துலகின் எல்லாத் தளங்களிலும் தடம் பதித்தவர்; வேருக்கு நீர் என்னும் புதினத்திற்காக சாகித்திய அகாதெமி விருது பெற்ற முதல் பெண் எழுத்தாளர்.

இத்தகைய பெருமைமிக்க எழுத்தாளர் ராஜம் கிருஷ்ணனை நம் கண்களுக்குக் காட்சிப்படுத்த வருகிறார் ஒன்பதாம் வகுப்பு மாணவி வளர்மதி.

(கரவொலி)



**வளர்மதி (ராஜம் கிருஷ்ணன்)** – என் பள்ளிப் பருவத்தின் பசுமை மாறா நினைவுகள் நெஞ்சில் எழுகின்றன. வணக்கம்.

பெண்கள் என்றால் குடும்பக்கதை எழுதவேண்டும் என்ற படிமத்தை உடைத்துச் சமூகச் சிக்கல்களைக் கதைகளாக எழுதினேன். நான் கற்பனையாக எழுத விரும்பவில்லை. சமூகத்தில் இடர்ப்பட்ட மக்களைப் பற்றி எழுதும் முன்பு அந்த மக்கள் வாழும் பகுதிக்குள் சென்று களப்பணியாற்றிக் கதைகளாக உருவாக்கினேன்.

எப்போதும் ஓர் ஒலிப்பதிவுக் கருவியுடனேயே இருப்பேன். எனது கள ஆய்வுப் புதினங்கள் ஒவ்வொன்றும் மக்களைச் சேரவேண்டும் என்றே நினைப்பேன்.

நான் எழுதிய 'பாஞ்சாலி சபதம் பாடிய பாரதி' என்னும் பாரதியின் வரலாற்றுப் புதினம் அனைவராலும் பாராட்டப்பெற்ற ஒன்றாகும்.

தூத்துக்குடியில் பல மாதம் தங்கியிருந்து உப்பளத் தொழிலாளர்களின் உவர்ப்பு



10th_Tamil_Unit 7.indd 173 12/08/2021 7:01:10 PM

வாழ்க்கையைக் "கரிப்பு மணிகள்" புதினமாக ஆக்கினேன். நீலகிரி, படுகர் இன மக்களின் வாழ்வியல் மாற்றங்களைக் குறித்து நான் பதிவு செய்ததே "குறிஞ்சித் தேன்" புதினம். கடலோர மீனவர் வாழ்வின் சிக்கல்களைப் பேசுவதே "அலைவாய்க் கரையில்" புதினம். அமைப்புசாரா வேளாண் தொழிலாளர்களின் உழைப்பு சுரண்டப்படுவதைச் சுட்டிக்காட்டியவையே "சேற்றில் மனிதர்கள்", "வேருக்கு நீர்" ஆகிய புதினங்கள்.

உங்களைப் போன்ற குழந்தைகளைத் தீப்பெட்டித் தொழிலில் முடக்கி, தீக்குச்சிகளை அந்தப் பெட்டியில் அடைப்பதைப் போன்று, குழந்தைகளின் உடலையும் மனத்தையும் நொறுக்கும் அவல உலகைக் "கூட்டுக் குஞ்சுகள்" புதினமாக அளித்தேன்.

பெண்குழந்தைக் கொலைக்கான காரணங்களை ஆராய்ந்து எழுதியதே "மண்ணகத்துப் பூந்துளிகள்". இப்படிச் சமூக அவலங்களை உற்று நோக்கி எழுத்தின் வழியாகக் கட்டவிழ்த்து உலகிற்குக் காட்டியிருக்கிறேன். எழுத்துகளில் நேர்மையான சினம், அறச் சீற்றம் இருக்கவேண்டும் என்பதே எனது வேண்டுகோள்.

வாய்ப்புக்கு நன்றி!. வணக்கம்!.

**தொகுப்பாளர்** - கற்பனைக் கதைகளை எழுதுவதற்குப் பதிலாகக் களத்திற்குச் சென்று, உண்மையான நிகழ்வுகளை நூல்களாகத் தந்த ராஜம்கிருஷ்ணனைப் போன்று வேடமிட்டு வந்த மாணவி வளர்மதிக்கு நன்றியைக் கூறுகின்றோம்.

உள்ள வலுவுடன் இன்றுவரை களத்தில் நிற்கும் போராளி; மதுரையின் முதல் பட்டதாரிப்பெண்; இந்திய அரசின் தாமரைத்திரு விருது, சுவீடன் அரசின் வாழ்வுரிமை விருது, சுவிட்சர்லாந்து அரசின் காந்தி அமைதி விருது எனப் பல உயரிய விருதுகளைப் பெற்றுப் பெண்குலத்திற்குப் பெருமை சேர்த்தவர்.

அவர் யார்? என அறிய ஆவலோடு இருப்பீர்கள். அவர்தாம் கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன். இப்போது மாணவி அன்பரசி கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதனாகப் பேச வருகிறார். (கரவொலி)

**அன்பரசி (கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன்)** – வணக்கம்! நாட்டின் விடுதலைக்கு முன்பு கல்வி மறுக்கப்பட்ட காலத்தில் போராடிக் கற்றேன். கல்லூரிப்பருவத்தில் காந்தியச்சிந்தனையில் கவரப்பட்டேன். அவரது சர்வோதய இயக்கத்தில் களப்பணி ஆற்றினேன். ஒத்துழையாமை இயக்கம், சட்ட மறுப்பு இயக்கம், வெள்ளையனே வெளியேறு இயக்கம் ஆகியவற்றில் பங்கு பெற்றேன். நாட்டின் விடுதலைக்குப் பின் கணவருடன் இணைந்து "பூதான" இயக்கத்தில் பணிபுரிந்தேன்.



"உழுபவருக்கே நில உரிமை இயக்கம்" (*LAND FOR THE TILLER'S FREEDOM – LAFTI*) தொடங்கி வேளாண்மை இல்லாத காலத்திலும் உழவருக்கு வேறுபணிகள் மூலம் வருமானம் வர ஏற்பாடு செய்தேன்.

நான் சொல்ல விரும்புவது,

"உங்களுடைய ஆற்றலை நீங்கள் உணருங்கள். உங்களால் எதையும் சாதிக்க இயலும்" என்பதுதான்.

**தொகுப்பாளர்** – காந்தியடிகளுடனும் வினோபாபாவேயுடனும் பணியாற்றி இன்னமும் நம் நாட்டுமக்களுக்காக உழைக்கும் கிருஷ்ணம்மாள் அம்மையாரைக் கண்முன்னே கொண்டுவந்த மாணவி அன்பரசிக்கு வாழ்த்துகள்.

இன்றைய மகளிர்நாள் விழா மிகச் சிறப்பாக நடந்துகொண்டிருக்கிறது. முத்தாய்ப்பாக இவ்விழாவை மேலும் மெருகேற்ற மண்ணின் மணம் கமழ வருகிறார்; பள்ளிப்பருவத்தில் பாடம் பயிலாவிட்டாலும் பட்டறிவால் இவர் கற்றுக்கொண்டவை ஆயிரமாயிரம். எழுதப் படிக்கத் தெரியாத இவரைப்பற்றி எழுதாத ஊடகங்களே இல்லை. முதுமைப் பருவத்தில் பயணித்தாலும் இவர் இன்னும் சின்னப்பிள்ளைதான்! ஆம்!

சின்னப்பிள்ளை அம்மாவின் வேடம் ஏற்று வருபவர் நம் பள்ளியின் சின்னப்பிள்ளை ஒன்பதாம் வகுப்பு மாணவி மாதவி.

(கரவொலியுடன் மேடை ஏறுகிறார்.)

**மாதவி (சின்னப்பிள்ளை)** – இங்க கூடியிருக்கிற எல்லாருக்கும் வணக்கமுங்க. ரொம்ப நேரமா பார்த்துக்கிட்டு இருக்கிற எம்மனசுக்கு ரொம்ப மகிழ்ச்சியா இருக்குதுங்க. நான் பள்ளிக்கூடமெல்லாம் போனதில்லீங்க.



முதல்ல பெண்கள் எல்லாம் குழுவாச் சேர்ந்தோம். விவசாய நிலத்தக் குத்தகைக்கு எடுத்தோம். கூலி வேலைக்கு ஆளுகளைச் சேர்த்து, நடவு, களையெடுப்பு, அறுவடை போன்ற வேலைகளைச் செய்தோம். வர்ற கூலிய சரிசமமா பிரிச்சுக்கொடுத்தோம். இதுல வயசானவங்களையும் மாற்றுத் திறனாளிகளையும் சேர்த்து வேலை கொடுத்து அவங்க குடும்பத்துக்கும் உதவியா இருந்தோம். இதைப்பத்திக் கேள்விப்பட்ட மதுரை மாவட்ட ஆட்சியர் கண்மாய்ல மீன் பிடிக்கிற குத்தகைய எங்களுக்குக் கொடுத்தாரு. இரண்டாயிரத்து நாலாம் வருஷம் சுனாமி வந்து ஊரெல்லாம் பாதிப்பு அடஞ்சப்போ நாங்க குழுவா போயி மீட்புப் பணியெல்லாம் செஞ்சோம்.

காசு சேர்த்துக் குழு ஒண்ணு ஆரம்பிச்சு "களஞ்சியம்"னு பேர் வெச்சோம். பத்துப் பேரோட ஆரம்பிச்ச மகளிர் குழு இன்னைக்கிப் பல மாநிலங்களுக்குப் போய் பல லட்சம் பேரோட வேலை செய்யுது. எத்தனையோ பேரோட குடும்பத்த இந்தக் குழுதான் தாங்கிக்கிட்டு இருக்கு. முப்பது ஆண்டுகளா முகம் சுளிக்காம வேலை செஞ்சிட்டு வர்றேன். வேற என்னத்த நான் சொல்ல? பொறப்புக்கு ஒரு பொருள் கிடைக்கிற மாதிரி வேலை செஞ்சாச்சு. நீங்க எல்லாம் நல்லாப் படிங்க. உங்க வீட்டுக்கும் நாட்டுக்கும் நல்லது பண்ணுங்க!.

**தொகுப்பாளர்** – சின்னப்புள்ள அம்மா, உங்ககிட்ட ஒரு கேள்வி கேட்கலாமா? இந்தியாவின் முதன்மை அமைச்சரிடம் நீங்கள் விருது வாங்கியதைச் சொல்லவே இல்லையே!.

**சின்னப்பிள்ளை** – டெல்லியில விருது வாங்கும்போது, மதுரைச் சின்னப்பிள்ளைன்னு அவரு கூப்பிட்டவுடேன என் கண்ணுலேர்ந்து கண்ணீரே வந்துருச்சு. நாட்டுக்கே பெரிய தலைவர் அவரு, விருதைக் குடுத்துட்டுப் பொசுக்குனு எங்கால்ல விழுந்துட்டாரு. எனக்கு மேலுகாலெல்லாம் ஆடிப்போச்சு. நான் போயிட்டு வாரேன்! (கண்களைத் துடைத்துக் கொள்கிறார்)

**தொகுப்பாளர்** – நம் இந்திய நாட்டு நடுவண் முதன்மை அமைச்சராக இருந்த மாண்புமிகு. வாஜ்பாய் அவர்களின் கைகளால் பெண் ஆற்றல் விருது (ஸ்திரீ சக்தி புரஸ்கார்) பெற்றதோடு தமிழக அரசின் "ஔவை விருதையும்" தூர்தர்ஷனின் "பொதிகை விருதையும்" பெற்றுள்ளார். அண்மையில் "தாமரைத்திரு விருதையும்" பெற்றுத் தமிழகத்திற்குப் பெருமை சேர்த்துள்ளார். இன்னும் மகளிரின் வாழ்வு மேம்படத் தொடர்ந்து பாடுபட்டு வருகின்ற சின்னப்பிள்ளை வேடமணிந்து வந்து தன் நடிப்பாற்றலை வெளிப்படுத்திய மாணவி மாதவிக்கு நன்றி!. சமுதாயத்திற்கு உழைத்த மகளிரைப்பற்றி மாறுவேடத்தில் அறிமுகப்படுத்திய நிகழ்வு இனிதே இத்துடன் நிறைவடைகின்றது.

## கற்பவை கற்றபின்...

உங்கள் ஊரில் கடின உழைப்பாளர் – சிறப்புமிக்கவர் – போற்றத்தக்கவர் – என்ற நிலைகளில் நீங்கள் கருதுகின்ற பெண்கள் தொடர்பான செய்திகளைத் தொகுத்து வழங்குக.

**குறிப்பு:** பூ விற்பவர், சாலையோர உணவகம் நடத்துபவர்.....

கற்கண்டு

# நாடு ஏ

# புறப்பொருள் இலக்கணம்

(முதுகலைத் தமிழ் இலக்கியம் பயிலும் கிள்ளிவளவனும், பத்தாம் வகுப்பு மாணவன் சேரலாதனும் உரையாடுகின்றனர்).

கிள்ளிவளவன் : வா! சேரலாதா.. வா..

சேரலாதன் : வணக்கம் அண்ணா. எனக்கு நீங்கள் உதவ வேண்டும்.

கிள்ளிவளவன் : வணக்கம். நீ வந்தாய் என்றாலே தமிழ் இலக்கிய, இலக்கண உரையாடலுக்குத்தான் வருவாய். அப்புறம் என்ன உதவி என்கிறாய்!

சேரலாதன் : ஆமாம்மண்ணே! புறப்பொருள் பற்றிய செய்திகள் அறிய வந்தேன்.

கிள்ளிவளவன் : அகப்பொருள் பற்றி வேண்டாமா?

சேரலாதன் : வேண்டாம்மண்ணே! சென்ற திங்களில் தமிழாசிரியர் அகப்பொருள் பற்றி அருமையாகக் கூறினார்.

கிள்ளிவளவன்: அகப்பொருள் பற்றி நீ புரிந்து கொண்டதைக் கூறு.

சேரலாதன்: அகப்பொருள் அன்பின் ஐந்திணை பற்றியது அண்ணே.

கிள்ளிவளவன் : மகிழ்ச்சி. புறம் பற்றிய நெறிகளைக் கூறுவது புறத்திணை. புறத்திணைகள், வெட்சி முதலாகப் பன்னிரண்டு வகைப்படும்.

சேரலாதன் : வெட்சியென்றால் என்ன?

கிள்ளிவளவன் : மக்கள் சிறு குழுக்களாக வாழ்ந்த காலத்தில், ஆநிரைகளைச் (மாடுகளை) சொத்தாகக் கருதினர். ஒரு குழுவினரிடமிருந்து மற்றொரு குழுவினர் ஆநிரைகளைக் கவர்தல் வழக்கமாக இருந்தது. ஆநிரைகளைக் கவர்ந்துவர வெட்சிப் பூவினைச் சூடிக்கொண்டு செல்வர். எனவே, ஆநிரை கவர்தல் **வெட்சித் திணை** எனப்பட்டது.



அழகுச்செடியாக வீட்டுத் தோட்டங்களிலும் பூங்காக்களிலும் வளர்க்கப்படுகிற சிவந்த நிறமுடைய வெட்சிப்பூ, இட்லிப்பூ என்று அழைக்கப்படுகிறது.

சேரலாதன்: அழகு. அடுத்த திணை என்ன?

கிள்ளிவளவன்: **கரந்தைத் திணை.** கவர்ந்து செல்லப்பட்ட தம் ஆநிரைகளை மக்கள் மீட்கச்செல்வர். அப்போது கரந்தைப் பூவைச் சூடிக்கொள்வர். அதனால் கரந்தைத் திணை என்று பெயர் பெற்றது.



சிறிய முட்டை வடிவில் கொத்தாகப் பூக்கக் கூடிய கரந்தை ஒரு சிறிய செடி. நறுமணம் மிக்க இது செம்மை, நீலம், இளஞ்சிவப்பு, நீலம் கலந்த சிவப்பு ஆகிய நிறங்களில் பூக்கின்றது. இதனைக் 'கொட்டைக் கரந்தை' என்றும் கூறுவர்.

சேரலாதன்: அடுத்ததாக...

கிள்ளிவளவன் : **வஞ்சித்திணை.** மண் (நாடு) சொத்தாக மாறிய காலத்தில் மண்ணைக் கவர்தல் போராயிற்று. மண்ணாசை காரணமாகப் பகைவர் நாட்டைக் கைப்பற்றக் கருதி வஞ்சிப்பூவைச் சூடிப் போருக்குச் செல்வது வஞ்சித்திணை.



பளபளப்பான, மெல்லிய பூவின் இதழ்களில் வெள்ளிய பஞ்சு போன்ற நுண்மயிர் அடர்ந்துள்ளது வஞ்சி.

சேரலாதன்: அடுத்தது என்னண்ணே!

கிள்ளிவளவன்: **காஞ்சித் திணை.** தன் நாட்டைக் கைப்பற்ற வந்த மாற்றரசனோடு, காஞ்சிப்பூவைச் சூடி எதிர்த்துப் போரிடல் காஞ்சித்திணை.




கொத்துக் கொத்தாகப் பூக்கும் நீலநிற மலர்கள் கொண்ட அழகான மணமுள்ள காஞ்சி என்பது ஒருவகைக் குறுமரம்.

சேரலாதன் : ஓ... அப்படியா! அடுத்து..

கிள்ளிவளவன்: **நொச்சித்திணை.** மண்ணைக் காக்கக் கோட்டைகள் கட்டப்பட்டன. கோட்டையைக் காத்தல் வேண்டி, உள்ளிருந்தே முற்றுகையிட்ட பகையரசனோடு நொச்சிப்பூவைச் சூடிப் போரிடுவது நொச்சித்திணை.




மருத நிலத்துக்குரிய நொச்சி, கொத்துக்கொத்தான நீலநிறப்பூக்கள் கொண்டது. இதில் மணிநொச்சி, கருநொச்சி, மலைநொச்சி, வெண்ணொச்சி எனப் பலவகைகள் உள்ளன.

அடுத்தது **உழிஞைத் திணை** தம்பி. மாற்றரசனின் கோட்டையைக் கைப்பற்ற உழிஞைப் பூவைச் சூடிய தன் வீரர்களுடன் அதனைச் சுற்றி வளைத்தல் உழிஞைத்திணை.




வேலிகளில் ஏறிப்படரும் நீண்ட கொடியே உழிஞைக் கொடி. இதன் கூட்டிலைகளும் மலர்களும் சிறியவை; மலர்கள் மஞ்சள் நிறத்தில் காணப்படும். இதனை முடக்கத்தான் (முடக்கொற்றான்) எனக் கூறுகின்றனர்.

சேரலாதன்: இனி என்ன இருக்கு அண்ணே!

கிள்ளிவளவன்: **தும்பைத் திணை.** பகைவேந்தர் இருவரும் வலிமையே பெரிது என்பதை நிலைநாட்ட, தம் வீரர்களுடன் தும்பைப் பூவைச்சூடிப் போர்க்களத்தில் ஒருவரோடு ஒருவர் போரிடுவது தும்பைத் திணை. போரிடுகின்ற அரசர்கள் இருவரும் தும்பைப் பூ மாலையையே சூடியிருப்பார்கள். போர்த்திணைகள் படிப்படியாக வளர்ந்த நிலையில், போரைத் தொடங்கும் நிகழ்வாக ஆநிரை கவர்தல் மேற்கொள்ளப்பட்டது.

சேரலாதன்: சிறப்பு... மிகச் சிறப்பு! அடுத்து..




எல்லா இடங்களிலும் வளரக் கூடிய தூய வெண்ணிற மலர்களைக் கொண்ட சிறிய செடி தும்பை.

கிள்ளிவளவன்: **வாகைத்திணை.** போரிலே வெற்றிபெற்ற மன்னன் வாகைப்பூச் சூடி மகிழ்வது, வாகைத்திணை. வாகை என்றாலே வெற்றிதானே!



மங்கிய வெண்ணிற நறுமணம் கொண்ட கொத்துக் கொத்தாக மலரும் வாகை பூ.

சேரலாதன்: எப்படி முறையாகப் போர் புரிந்திருக்கிறார்கள். தமிழனின் மாண்பே மாண்பு.

கிள்ளிவளவன் : பாடுவதற்குத் தகுதியுடைய ஓர் ஆளுமையாளரின் கல்வி, வீரம், செல்வம், புகழ், கருணை முதலியவற்றைப் போற்றிப் பாடுவது, பாடாண்திணை (பாடு+ஆண்+திணை = **பாடாண்திணை).**

சேரலாதன்: ஆமாம், போரை மட்டும் சொல்லாது பிற மாண்புகளையும் பாடுகிறது இத்திணை. அருமை! அருமை!!

கிள்ளிவளவன்: அடுத்து... வெட்சி முதல் பாடாண்வரை உள்ள புறத்திணைகளில் பொதுவானவற்றையும், அவற்றுள் கூறப்படாதனவற்றையும் கூறுவது, **பொதுவியல் திணை.**

சேரலாதன் : கேட்கக் கேட்க இனிமை பயக்கிறது.

கிள்ளிவளவன்: **கைக்கிளை** என்பது ஒருதலைக் காமம்.

சேரலாதன்: அடுத்தது என்ன?

கிள்ளிவளவன்: **பெருந்திணை.** இது பொருந்தாக் காமத்தைக் குறிக்கிறது.

சேரலாதன்: அடடா... எப்படியெல்லாம் திணைகளை வகுத்திருக்கிறார்கள் மகிழ்ச்சி அண்ணே! நன்று அண்ணே!

கிள்ளிவளவன்: மகிழ்ச்சி தம்பி..



10th_Tamil_Unit 7.indd 177 12/08/2021 7:01:11 PM

www.tntextbooks.in

# திறன் அறிவோம்

**பலவுள் தெரிக.**

1. சரியான அகரவரிசையைத் தேர்ந்தெடுக்க.

   அ) உழவு, மண், ஏர், மாடு  ஆ) மண், மாடு, ஏர், உழவு

   இ) உழவு, ஏர், மண், மாடு  ஈ) ஏர், உழவு, மாடு, மண்

2. 'மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்' – மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே–

   அ) திருப்பதியும் திருத்தணியும்  ஆ) திருத்தணியும் திருப்பதியும்

   இ) திருப்பதியும் திருச்செந்தூரும்  ஈ) திருப்பரங்குன்றமும் பழனியும்

3. 'தன் நாட்டு மக்களுக்குத் தந்தையும் தாயும் மகனுமாக இருந்த அரசன்' என்னும் மெய்க்கீர்த்தித் தொடர் உணர்த்தும் பொருள் –

   அ) மேம்பட்ட நிருவாகத்திறன் பெற்றவர்  ஆ) மிகுந்த செல்வம் உடையவர்

   இ) பண்பட்ட மனிதநேயம் கொண்டவர்  ஈ) நெறியோடு நின்று காவல் காப்பவர்

4. இருநாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம் ………….

   அ) நாட்டைக் கைப்பற்றல்  ஆ) ஆநிரை கவர்தல்

   இ) வலிமையை நிலைநாட்டல்  ஈ) கோட்டையை முற்றுகையிடல்

5. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி. கருதியது ..........

   அ) திருக்குறள்  ஆ) புறநானூறு  இ) கம்பராமாயணம்  ஈ) சிலப்பதிகாரம்

**குறுவினா**

1. பாசவர், வாசவர், பல்நிண விலைஞர், உமணர் – சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?
2. மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கம் யாது?
3. வறுமையிலும் படிப்பின்மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி. என்பதற்குச் சான்று தருக.
4. புறத்திணைகளில் எதிரெதிர்த் திணைகளை அட்டவணைப்படுத்துக.
5. பொருத்தமான இடங்களில் நிறுத்தக் குறியிடுக.

   பழங்காலத்திலே பாண்டியன் ஆண்ட பெருமையைக்கூறி சோழன் ஆண்ட சிறப்பைச் சொல்லி சேரன் ஆண்ட மாண்பினைக் காட்டி நம் அருமைத் தமிழ்நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த சிறுமையையும் நினைவூட்டி விடுதலைப் போரில் ஈடுபட வருமாறு தமிழர்க்கு அழைப்பு விடுத்திருந்தேன் – ம.பொ.சி.



10th_Tamil_Unit 7.indd 178 12/08/2021 7:01:11 PM

## சிறுவினா

1. 'முதல்மழை விழுந்ததும்' என்னவெல்லாம் நிகழ்வதாக கு.ப.ரா. கவிபாடுகிறார்?
2. அவந்தி நாட்டு மன்னன், மருதநாட்டு மன்னனுடன் போர் புரிந்து அந்நாட்டைக் கைப்பற்ற நினைக்கிறான்; அப்போர் நிகழ்வைப் புறப்பொருள் வெண்பாமாலை கூறும் இலக்கணத்தின் வழி விளக்குக.
3. "தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" இடம் சுட்டிப் பொருள் விளக்குக.
4. "பகர்வனர் திரிதிரு நகரவீதியும்;
பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்;
தூசும் துகிரும் ஆரமும் அகிலும்"

அ) இவ்வடிகள் இடம்பெற்ற நூல் எது?
ஆ) பாடலில் அமைந்த மோனையை எடுத்து எழுதுக.
இ) எதுகைச் சொற்களை அடிக்கோடிடுக.
ஈ) காருகர் – பொருள் தருக.
உ) இப்பாடலில் குறிப்பிடப்படும் நறுமணப் பொருள்கள் யாவை?

5 பின்வரும் பத்தியைப் படித்து மையக்கருத்தை எழுதுக.

பேரரசனது மெய்ப் புகழை எடுத்துக்கூறுவது மெய்க்கீர்த்தி. பொதுவாக இது சோழ மன்னருடைய சாசனங்களின் தொடக்கத்தில் அரசனுடைய இத்தனையாவது ஆட்சியாண்டு என்று கூறுமிடத்து அமைக்கப்பெறும். சிறப்பாக அவனுடைய போர் வெற்றிகளையும் வரலாற்றையும் முறையாகக் கூறி, அவன் தன் தேவியோடு வீற்றிருந்து நீடு வாழ்க எனக் கூறி, பிறகே சாசனம் எழுந்த நிகழ்ச்சியைக் குறிப்பிடும்.

சோழ மன்னர் பரம்பரையில் மெய்க்கீர்த்தியோடு சாசனங்களைப் பொறிக்கும் வழக்கம் நெடுநாள் இருந்ததில்லை. முதல் இராசராசனுடைய எட்டாம் ஆண்டில்தான் மெய்க்கீர்த்தி காணப்படுகிறது. இதன்கண் வமிச பாரம்பரியம் விதந்து ஓதப்படவில்லை; ஏனைய பகுதிகள் உள்ளன.எனினும் இது மிகவும் சுருக்கமாகவே உள்ளது. இன்னும் பின்வந்த மெய்க்கீர்த்திகளின் வமிச பரம்பரையை மிகவும் விரித்துக் கூறியுள்ளன.

## நெடுவினா

1. நாட்டு விழாக்கள் – விடுதலைப் போராட்ட வரலாறு – நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு – குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் 'மாணவப் பருவமும் நாட்டுப் பற்றும்' என்ற தலைப்பில் மேடை உரை எழுதுக.
2. பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள மெய்க்கீர்த்திப் பாடலின் நயத்தை விளக்குக.
3. சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.
4. நிகழ்வுகளைத் தொகுத்து அறிக்கை எழுதுக.

**மகளிர் நாள்விழா**

இடம் – பள்ளிக் கலையரங்கம் நாள் – 08.03.2019

கலையரங்கத்தில் ஆசிரியர்கள், மாணவர்கள் கூடுதல் – தலைமையாசிரியரின் வரவேற்பு – இதழாளர் கலையரசியின் சிறப்புரை – ஆசிரியர்களின் வாழ்த்துரை – மாணவத் தலைவரின் நன்றியுரை

## மொழியை ஆள்வோம்!

### படித்தும் பார்த்தும் சுவைக்க.



*ஏர்பிடிக்கும் கைகளுக்கே*
*வாழ்த்துக் கூறுவோம் – வறுமை*
*ஏகும்வரை செய்பவர்க்கே*
*வாழ்த்துக் கூறுவோம் ! – என்றும்*
*ஊர்செழிக்கத் தொழில்செய்யும்*
*உழைப்பாளிகள் – வாழ்வு*
*உயரும்வகை செய்பவர்க்கே*
*வாழ்த்துக் கூறுவோம்!* – *கவி கா.மு ஷெரீப்.*

### மொழிபெயர்க்க.

*Among the five geographical divisions of the Tamil country in Sangam literature, the Marutam region was fit for cultivation, as it had the most fertile lands. The property of a farmer depended on getting the necessary sunlight, seasonal rains and the fertility of the soil. Among these elements of nature, sunlight was considered indispensable by the ancient Tamils.*

### பின்வரும் தொடர்களைக் கொண்டு பொருத்தமான தொடர் அமைக்க.

வரப் போகிறேன், இல்லாமல் இருக்கிறது, கொஞ்சம் அதிகம், முன்னுக்குப் பின், மறக்க நினைக்கிறேன்

**எ.கா.** இன்னும் சிறிது நேரத்தில் வரப் போகிறேன்

### தொகைச் சொற்களைப் பிரித்து எழுதி, தமிழ் எண்ணுரு தருக.

மூவேந்தர்களால் நாற்றிசையும் போற்றி வளர்க்கப்பட்ட முத்தமிழே, உலக மொழிகளில் உயர்ந்ததென்ற செம்மாந்த கூற்றிற்கு, தமிழ் இலக்கியங்களில் அமைந்துள்ள இருதிணை அமைப்பே காரணமாகும். முப்பாலை முழுமையாகத் தந்த தமிழின் சிறப்பினை ஐந்திணைகளில் அழகுற விளக்குபவை சங்க இலக்கியங்கள். நானிலத்தில் பசித்தவர்க்கு அறுசுவை உணவுபோல் பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் படிப்பவர்க்கு மனதிற்கினிமை ஈந்து தமிழ்ப்பெருமை சாற்றுகிறது.

### கடிதம் எழுதுக.

நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் 'உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்' என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி, அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.



10th_Tamil_Unit 7.indd 180 12/08/2021 7:01:11 PM

**கவிதையை உரையாடலாக மாற்றுக.**

*மகள் சொல்லுகிறாள்:–*

*அம்மா என் காதுக்கொரு தோடு – நீ*
*அவசியம் வாங்கி வந்து போடு !*
*சும்மா இருக்க முடியாது – நான்*
*சொல்லி விட்டேன் உனக்கு இப்போது!*

*தாய் சொல்லுகிறாள் :–*

*காதுக்குக் கம்மல் அழகன்று – நான்*
*கழறுவதைக் கவனி நன்று*
*நீதர் மொழியை வெகுபணிவாய் – நிதம்*
*நீ கேட்டு வந்து காதில் அணிவாய்!*

*மகள் மேலும் சொல்லுகிறாள்:*

*கைக்கிரண்டு வளையல் வீதம் – நீ*
*கடன்பட்டுப் போட்டிடினும் போதும்!*
*பக்கியென் றென்னை யெல்லோரும் – என்*
*பாடசாலையிற் சொல்ல நேரும்!*

*தாய் சொல்லும் சமாதானம் :*

*வாரா விருந்து வந்த களையில் – அவர்*
*மகிழ உபசரித்தல் வளையல்!*
*ஆராவமுதே மதி துலங்கு – பெண்ணே*
*அவர்சொல்வ துன்கைகட்கு விலங்கு!*

*பின்னும் மகள் :*

*ஆபர ணங்கள் இல்லை யானால் – என்னை*
*யார் மதிப்பார் தெருவில் போனால்?*
*கோபமோ அம்மா இதைச் சொன்னால் – என்*
*குறைதவிர்க்க முடியும்*

*அதற்குத் தாய்:*

*கற்பது பெண்களுக்கா பரணம் – கெம்புக்*
*கல்வைத்த, நகைதீராத ரணம்!*
*கற்ற பெண்களை இந்த நாடு – தன்*
*கண்ணில் ஒற்றிக் கொள்ளுமன் போடு!*

*–பாரதிதாசன்*


## மொழியோடு விளையாடு

**ஊர்ப்பெயர்களின் மரூஉவை எழுதுக.**

புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, உதகமண்டலம், கோயம்புத்தூர், நாகப்பட்டினம், புதுச்சேரி, கும்பகோணம், திருநெல்வேலி, மன்னார்குடி, மயிலாப்பூர், சைதாப்பேட்டை

எ.கா. தஞ்சாவூர் – தஞ்சை

**படம் தரும் செய்தியைப் பத்தியாகத் தருக**



வீறுகொண்டு முன்னேறும் காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை
17ஆம் நூற்றாண்டுச் சுவரோவியம், திருப்புடைமருதூர், திருநெல்வேலி.

**அகராதியில் காண்க.**

*மிரியல், வருத்தனை, அதசி, துரிஞ்சில்*



10th_Tamil_Unit 7.indd 181 12/08/2021 7:01:12 PM

### காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

### கலைச்சொல் அறிவோம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| *Consulate* | – | துணைத்தூதரகம் | *Guild* | – | வணிகக் குழு |
| *Patent* | – | காப்புரிமை | *Irrigation* | – | பாசனம் |
| *Document* | – | ஆவணம் | *Territory* | – | நிலப்பகுதி |

## நிற்க அதற்குத் தக...

அரசால் நிறுவப்படும் கட்டடங்களிலும் சிலைகளிலும் நிறுவியவர் பெயர், நிறுவப்பட்ட காலம், நோக்கம் சார்ந்த பிற செய்திகளும் தாங்கிய கல்வெட்டுகளைப் பார்த்திருப்பீர்கள். இவை நமது இன்றைய வரலாற்றைப் புலப்படுத்தபவை.

அதுபோலவே கோவில்களிலும் பழமையான நினைவுச் சின்னங்களிலும் கட்டியவர்கள் பெயர்களும் வரலாறும் இடம்பெற்றிருக்கும். அவை நம் பழம்பெருமையையும் வரலாற்றையும் அறியச் செய்யும் அரிய ஆவணங்கள் என்று அறிவீர்கள்தானே? இவற்றைப் பராமரிக்கவும், பாதுகாக்கவும் உங்களால் இயன்ற செயல்கள்..

| | |
|---|---|
| கல்வெட்டுகளின்வழி அறியலாகும் செய்திகளை என் நண்பர்களுக்குக் கூறுவேன். | அவற்றின் மதிப்பைக் குறைக்கும்படி எதுவும் கூற அனுமதிக்க மாட்டேன். |
| கல்வெட்டுகள் குறித்து அவர்களைப் பெருமிதம் அடையச் செய்வேன். | |
| | |

## அறிவை விரிவு செய்

என் கதை – நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம்

வேருக்கு நீர் – ராஜம் கிருஷ்ணன்

நாற்காலிக்காரர் – ந. முத்துசாமி










## இணையத்தில் காண்க.

*http://www.maposi.in/* (ம.பொ.சி. யின் இணையத்தளம்)

*http://www.tamilvu.org/slet/lA100/lA100pd2.jsp?bookid = 180&pno = 40* (கு.ப.ரா. கவிதைகள்)

*http://www.varalaaru.com/design/article.aspx?ArticleID = 124* (வரலாற்றாய்வு – மெய்கீர்த்திகள்)

*http://silapathikaram.com/blog/?tag =* மருவூர்ப்பாக்கம்



10th_Tamil_Unit 7.indd 182 12/08/2021 7:01:12 PM